பக்கங்கள் 15 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 02 சனிக்கிழமை 19.10.2024 | அதிர்வு 79



## முடிவை மாற்றினார் ஹிருணிகா

ஐக்கிய மக்கள் சக்தியுடன் முரண்பட்ட அந்தக் கட்சியின் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளரான ஹிருணிகா பிரேமச்சந்திரவைக் கட்சித்

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### மலையகத்தில் காணி வழங்கல், வடக்கில் காணி விடுவிப்பு:

# உத்தரவாதங்கள் வழங்கிவிட்டு தமிழர்களிடம் வாக்குகளைக் கோரலாம் அநுரகுமார அரசு!

### விசேட அறிக்கையில் மனோ சுட்டிக்காட்டு

"மலையகத்தில் வீட்டுக் காணி, வாழ்வாதார காணி, தனி வீடு ஆகியன அடங்கிய காணி உரிமை உத்தரவாதங்களையும், வடக்கு - கிழக்கில் தனியார் காணிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் அகற்றல், போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்னும் இருக்கின்ற மேலதிக இராணுவ முகாம்களை மூடல், இவை மூலம் தனியார் காணிகள் விடுவிப்பு ஆகியன அடங்கிய காணி உரிமை உத்தரவாதங்களையும் வழங்கி விட்டு அநுர அரசு தமிழ் மக்களின்



வாக்குகளை மலையகத்திலும், வடக்கு - கிழக்கிலும் கோரலாம்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று சனிக்கிழமை விடுத்துள்ள விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"நாம் பங்காளிகளாக இருந்த நல்லாட்சியின்போது, தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய எமது கட்சிகளின் வலியுறுத்தல் காரணமான இராணுவம் வசம் இருந்த கணிசமான காணிகள் வடக்கில் விடுவிக்கப்பட்டன. பின்னர் ஜனாதிபதி கோட்டாபய காலத்தில் இந்தக் காணி விடுவிப்பு நின்று போனது. ஜனாதிபதி ரணிலின் இரண்டு வருட ஆட்சி காலத்தில் இது பற்றி பேசப்பட்டது.

02



## 113 ஆசனங்களே எங்கள் இலக்கு!

### சஜித் அணி தெரிவிப்பு

"ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரண்டு தடவைகள் ஆயுதம் ஏந்தியவர்கள்தான் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளனர். எனவே, நாட்டு மக்கள் நாடாளுமன்றத் தேர்தலின்போது ஜனநாயகம் பற்றியும் சிந்திக்க வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

02

## நிமலராஜனின் நினைவேந்தல்




(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

# தேர்தலுக்குப் பின்னர் ரணில் - சஜித் சங்கமம்?



ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் எதிர்காலத்தில் ஒன்றிணைவதற்குரிய சாத்தியம் உள்ளது எனவும், நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இந்தச் சங்கமம் நடக்கலாம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் ஒன்றிணைத்து தேர்தலில் போட்டியிட வைப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை.

எனினும், இவ்விரு தரப்பும் ஒரு முகாமில் இருந்தவை. எனவே, இரு தரப்பினரும் இணைவதற்குரிய சாத்தியம் உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இணைந்து, நாட்டு மக்களுக்கு யானையை வழங்கக்கூடிய சூழ்நிலை உள்ளது.

அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைக்கும் நோக்கிலேயே நாடாளுமன்றத் தேர்தலிலும் நாம் சிலிண்டர் சின்னத்தை முன்வைத்தோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஆணை கிடைத்தால் நாட்டை ஆளவும் தயார். எதிர்க்கட்சிப் பதவி கிடைத்தால் அர்ப்பணியையும் எமது அணி சிறப்பாக முன்னெடுக்கும்.” – என்றார்.

## 113 ஆசனங்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“விடுதலைப்புலிகள் அமைப்பினர் ஆயுதம் ஏந்துவதற்கு முன்னர் ஆயுதம் ஏந்தியவர்கள்தான் ஜே.வி.பியினர். இரண்டு தடவைகள் அவர்கள் கிளர்ச்சி செய்தனர். அதனால்தான் அரசியல்வாதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நேரிட்டது. ஜே.வி.பியினரிடமிருந்து உயிரைப் பாதுகாத்துக்கொள்ளவே அன்று பொலிஸ் பாதுகாப்பைக் கோரினோம்.

இன்று எமக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. ஆனால், எதற்காகப் பொலிஸ் பாதுகாப்பு பெறப்பட்டது என்ற வரலாற்றை மறக்கக்கூடாது.

தேர்தலுக்குப் பின்னர் நாட்டில் குழப்பம் இருக்கவில்லை. இதனை மதிக்கின்றோம். இப்படியே ஜனநாயக வழியில் ஜே.வி.பி. பயணிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியை இலக்கு வைத்தே போட்டியிடுகின்றோம். 113 இற்கும் மேற்பட்ட ஆசனங்களை எதிர்பார்க்கின்றோம். நாட்டின் ஜனநாயகம் மற்றும் நாடாளுமன்ற முறைமையை பாதுகாக்க மக்கள் வாக்களிப்பார்கள் என நம்புகின்றோம்.

ஆயுத பலம் ஊடாக இரு தடவைகள் ஆட்சியைக் கைப்பற்ற முற்பட்டவர்களிடம் தான் தற்போது ஆட்சி ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, ஜனநாயகம் பற்றியும் மக்கள் சிந்திக்க வேண்டும்.” – என்றார்.

## முடிவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரான சஜித் பிரேமதாஸ சமரசப்படுத்தியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதன் ஓர் அங்கமாகவே ஹிருணிகாவின் பதவி விலகல் கடிதத்தை கட்சி ஏற்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுவதாக ஹிருணிகா பிரேமச்சந்திர அறிவித்திருந்தார். இது தொடர்பான பதவி விலகல் கடிதத்தைக் கட்சியின் பொதுச்செயலாளருக்கு அனுப்பியிருந்தார்.

இந்நிலையிலேயே ஹிருணிகாவை நேரில் அழைத்து பேசி, அவரைக் கட்சித் தலைவர் சமரசப்படுத்தியுள்ளார். இந்தச் சந்திப்பின் பின்னர் ஹிருணிகா பிரேமச்சந்திரவும், கட்சியின் பொதுச்செயலாளரும் இணைந்து கூட்டாக ஊடக சந்திப்பை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உத்தரவாதங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், காரியம் எதுவும் நடக்கவில்லை.

இன்று, போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்னும் இன்னமும் நிலைபெற்று இருக்கும் மேலதிக இராணுவ முகாம்களை மூடி, விடுவிக்கப்படாமல் எஞ்சி இருக்கின்ற தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் அநுர அரசின் கொள்கைதான் என்ன என்பது தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

மலையகத் தமிழர்களைக் காணி உரிமையை பிரதான அம்சமாகக் கொண்ட விரிவான ஒரு சாசனத்தை தமிழ் முற்போக்குக் கூட்டணி வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் நாம் ஐக்கிய மக்கள் கூட்டணியில் சஜித பிரேமதாஸவுடன் செய்திருந்தோம். துரதிஷ்டவசமாக அவர் வெற்றி பெறவில்லை.

ஜனாதிபதி ரணிலின் இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் மலையக மக்களுக்குக் காணி வழங்கல் பற்றி மீண்டும், மீண்டும் பேசப்பட்டது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் கூற பட்டது. ஆனால், காரியம் நடக்கவில்லை. ஆனால், காணி உரிமையை சட்டப்படி வழங்க வாய்ப்பு இருந்தும் தனது இரண்டு வருட ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் அதைச் செய்ய ரணில் தவறிவிட்டார்.

இன்று தோழர் அநுர ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். இது பற்றி மகிழ்ச்சியே. மலையகத்தில் வீட்டுக் காணி, வாழ்வாதாரக் காணி, தனி வீடு ஆகியன அடங்கிய காணி உரிமையைப் பெருந்தோட்டங்களில் வாழும் மலையக மக்களுக்கு வழங்குவது தொடர்பில், இன்று மலையகத்தில் தமிழ் மக்களின் வாக்குகளை கோரும் அநுர அரசின் கொள்கைதான் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

இதற்கான தெளிவான பதில்களையும் வழங்காமல், தமிழ் மக்களுக்கு எந்தவித உத்தரவாதங்களையும் தராமல், மறுபுறம் தமிழ் அரசியல்வாதிகள் அனைவரையும் ஏறக்குறை போர்க் குற்றவாளிகள் போல விமர்சித்து கொண்டு, தமிழர்களிடம் வாக்குக் கோரும் போக்கைத்தான் என்.பி.பி. – ஜே.வி.பி. ஆட்சியாளர்கள் தொடர போகின்றார்களா? எனக் கேட்க விரும்புகிறேன்.

200 வருடங்களாகக் கொத்தடிமை வாழ்வு வாழும் பெருந்தோட்ட மக்கள் பற்றியும், கிளிநொச்சியில் வருடக்கணக்கில்போராடும், காணாமல்போனவர்களின் குடும்பங்கள் பற்றியும், அனுதாப வார்த்தைகளை அவ்வப்போது அள்ளிக் கொட்டுவது மாத்திரமே என்.பி.பி. – ஜே.வி.பி ஆட்சியாளர்களின் கொள்கையாக இருக்கப் போகின்றதா? எனவும் கேட்க விரும்புகின்றேன்.

வானத்தில் இருந்து இறங்கி வந்த தேவர்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டு இருக்கும் நபர்களின் அனுதாப வார்த்தைகளோ, உபதேசங்களோ எமக்குத் தேவையில்லை. நியாயம்தான் எமக்குத் தேவை என்பதைக் கூறி வைக்கவும் விரும்புகின்றேன்.” – என்றுள்ளது.







# யாழில் நிமலராஜனின் நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட மயில்வாகனம் நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தில் அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நிமலராஜனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, பொதுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

போர்ச் சூழலில் யாழ்ப்பாணத்தில் இருந்து துணிவாக ஊடகப் பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி , ராவய போன்ற ஊடகங்களில் அவர் பணியாற்றியிருந்தார்.

அந்நிலையில் கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன்போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனைப் படுகொலை செய்த பின்னர் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

அதன்போது வீட்டில் இருந்த நிலமராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்திருந்தனர்.

குறித்த படுகொலை சம்பவம் நடைபெற்று 23 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை விசாரணைகள் எதுவும் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

புதிய அரசு ஆட்சி அமைத்த பின்னர் கூட கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் தொடர்பில் எவ்விதமான விசாரணைகளும் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வேட்பாளர்கள் கடப்பாடு

வழமைக்கு மாறாக இம்முறை பொதுத் தேர்தலில் வேட்பாளர்கள் எண்ணிக்கை எக்கச்சக்கம்.

ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 396 பேர் களத்தில் இருக்கின்றார்கள்.

நாடு முழுவதிலும் மொத்தம் 8,821 வேட்பாளர்கள் இந்தப் பொதுத் தேர்தலில் களத்தில் குறித்துள்ளனர்.

தவிரவும் கட்சிகள் தங்களுடைய தேசிய பட்டியல் வேட்பாளர்களாகவும் பல நூறு பேரின் பெயர்களை சமர்ப்பித்துள்ளன.

இவர்களில் பலர் பெயருக்கு - பாஷனுக்கு - களத்தில் குதித்திருப்பவர்கள்.

வெற்றிவாய்ப்புக் கிஞ்சித்தும் இல்லை - வெற்று வாய்ப்புத்தான் - என்று தெரிந்தும் கூட, வேட்பாளர் பட்டியல்களைப் போட்ட சுயேச்சை குழுக்களும் தாராளம்.

ஆக, ஒரு வேட்பாளருக்கு சுமார் 2,000 ரூபாதான் கட்டுப்பணம் என்பதால் அது பற்றிய கவலையின்றி பல்வேறு குழுக்களும் களத்தில் குதித்துள்ளன.

பல சுயேச்சைக் குழுக்களுக்கு வேட்பாளர் பட்டியலை முழுமையாக நிறைவு செய்வதற்கு வேட்பாளர்கள் இல்லாத காரணத்தினால் தெரிந்தவர்கள், போனவர்கள், வந்தவர்கள் என்று எல்லோருடைய பெயரையும் சேர்த்து இருக்கிறார்கள்.

இப்படிப் பெயர் சேர்த்தவர்கள், அதனோடு சேர்ந்து சில பொறுப்புகளும் சட்டக் கடப்பாடுகளும் பிரச்சினைகளும் தங்களுக்கு வந்து சேர்ந்துள்ளன என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே இந்த வேட்பு மனுக்களில் ஒப்பமிட்டு இருக்கிறார்கள் என்பதுதான் விசனத்துக்குரிய விடயம்.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களில் பெயர் உள்ளவர்கள் பிரசார நிதி சட்டத்தின் படி இந்தத் தேர்தல் முடிந்து 21 நாள்களுக்குள் தங்களுடைய தேர்தல் பிரச்சார செலவு விவரங்கள் அடக்கிய அறிக்கைகளை தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

தவறினால், மேற்படி சட்டத்தின் கீழ் தங்களுடைய குடியியல் உரிமைகளை மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் இழக்க வேண்டி வரும் என்பதை நீதி, நியாயமான தேர்தலுக்குரிய மக்கள் செயற்பாட்டு மையமான பவ்ரலின் நிறைவேற்று இயக்குநர் றோஹண ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டுகிறார்.

இப்போது சட்டம் வலு தெளிவானது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பொலிஸும் தேர்தல் ஆணையமும் இனிமேல் பின்னிக்க மாட்டா. அதனால் நிச்சயமாக இந்தத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் தங்கள் கணக்கு வழக்குகளை தேர்தல் முடிந்து அடுத்த 21 நாள்களுக்குள் உரிய முறைப்படி - சட்டக் கடப்பாட்டுக்கு அமைவாக - சமர்ப்பிக்கத் தவறினால் மூன்று வருடங்களுக்கு குடியுரிமைகளை இழப்பது தவிர்க்க முடியாத கட்டாயமாக இருக்கும் என்று அவர் கூறியிருக்கிறார்.

தேர்தலில் நேரடியாக போட்டியிடும் 8,821 வேட்பாளர்களில் ஆக 196 பேர் மட்டுமே நேரடியாக மாவட்டங்களில் இருந்து எம்.பிக்களாகத் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். எஞ்சிய 8,625 பேரும் நிச்சயமாகத் தோல்வியடைவது தவிர்க்க முடியாததாக இருக்கும். அப்படி தோல்வியடைபவர்கள் இந்த தோல்வியின் பின்னர் கணக்கு வழக்கை சமர்ப்பித்தால் என்ன, சமர்ப்பிக்காவிட்டால் என்ன என்று பொறுப்பின்றி - விட்டேத்தியாக - செயல்பட முடியாது. அப்படிச் செயற்பட்டால் அவர்கள் நிச்சயமாக அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு குடியுரிமையை இழக்க வேண்டி நேரும். தொடர்ந்து வரக்கூடிய மாகாண சபை தேர்தல்கள், உள்ளூராட்சி தேர்தல்கள் போன்றவற்றில் போட்டியிடும் வாய்ப்பையும் வாக்களிக்கும் தகுதியையும் கூட அந்தக் காலகட்டத்தில் அவர்கள் இழந்திருப்பார்கள் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

தேசியப் பட்டியலில் போட்டியிட பெயர் கொடுத்தவர்கள் கூட இந்த கணக்கு வழக்குகளைக் காட்டியாக வேண்டும்.

பல சமயங்களில் அப்படி தேசிய பட்டியலில் போட்டியிட பெயர் பதிந்தவர்கள், ஒப்பமிட்டவர்கள் பிரசார நடவடிக்கையில் ஈடுபடாவிட்டாலும் கூட, அது பற்றிய விவரங்கள் அடங்கிய கணக்கு வழக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தாக வேண்டும். இல்லையேல் சட்டம் அவர்களுக்கு எதிராக இப்போது பாயும்.

இத்தகைய தேர்தல் சட்டத்தை முழு அளவில் பிரயோகிப்பதில் தேர்தல் ஆணையம் வலு தீவிரமாக இருப்பதாகவும் தெரிகிறது.

இப்படித் தேர்தலில் போட்டியிட்டோர் கணக்கு வழக்கு சமர்ப்பிப்பது என்பது வெளிப்பூச்சு வேடிக்கையான விவகாரம் அல்ல. ஏதோ ஒரு கணக்கைக் கொடுத்து முடித்து விடலாம் என்று கருதினால் - கணக்கு விட்டால் - அதில் கூட சிக்கல் உண்டு

தேர்தல்களை ஒட்டி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், அச்சிடப்படும் சுவரொட்டிகள், பிரசார நடவடிக்கைகள், விளம்பரங்கள் போன்றவை பற்றிய பதிவுகளை தேர்தல் ஆணையமும் பொலிஸாரும் அதற்குரிய தரப்புகள் மூலம் பதிந்து, ஒளிப்பதிவு செய்து, ஆவணப்படுத்தி, சேகரிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து இருப்பர் என்றும், சமர்ப்பிக்கப்படும் கணக்கு வழக்குகளின் நேர்சீர் மற்றும் உண்மைத் தன்மை அவற்றின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்றும், மாவட்ட ரீதியாக வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமான நிதியைச் செலவிட்டோரும், தவறான கணக்கு வழக்குகளை சமர்ப்பிப்போரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்றும் கூறப்படுகின்றது.

ஆக, மொத்தத்தில் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது என்பது வெறுமனே வேட்புமனுவில் பெயர் சேர்ப்பதோடு முடங்கி விடாது. அது, அதிக பொறுப்பும் கடப்பாடும் சிக்கலும் நிறைந்த விடயம் என்பதை இனித்தான் இந்த வேட்பாளர்களில் பெரும்பாலானோர் உணர்ந்து கொள்ள வேண்டிய இருக்கும் என்பது இப்போது புரியும்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET

## Gunams super market super deal

**18, 19, 20/10/2024**

100 $ மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு Maggi real coconut milk powder இலவசம்

Open until 10:00 PM.




1145 Morningside Ave, Toronto, ON M1B 0A7

Contact : 416 283 9998







# ஹோப் தன்னார்வ அமைப்பின் அழைப்பை ஏற்ற கிழக்கு ஆளுநர்

(எஸ்.கீதபொன்கலன்)

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு கல்வி வழங்கும் திருகோணமலை ஹோப் தன்னார்வ அமைப்பின் அழைப்புக்கு இணங்க, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர, இக் கல்வி நிறுவனத்துக்கு வியாழனன்று (17) ஒரு குறுகிய கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

நிறுவனத்தில் கற்கும் மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் மற்றும் நிர்வாகிகள், ஆளுநரை வரவேற்று கலந்துரையாடினர்.



# தமிழரசு கட்சித் தேர்தல் அலுவலகம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்டத்துக்கான பிரதான கட்சி அலுவலகம் வியாழக்கிழமை (17) மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் வைபவ ரீதியாக தமிழரசு கட்சி வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேஸனால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாகவும் கட்சி சார்ந்த தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவும் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் தமிழரசு கட்சியின் இளைஞர்களுக்கான கூட்டமும் மன்னார் தனியார் விடுதியில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தேவன்பிட்டி, வட்டகண்டல், வெள்ளிமலை, சாந்திபுரம், தலைமன்னார், பேசாலை, முருங்கன் உள்ளடங்களாக பல கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள் ஒன்று கூடலுக்கு வருகை தந்து தங்களது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதேநேரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வைத்தியருமான சிவமோகன் நிகழ்வில் கலந்து கொண்டு இந்த வருடம் தேர்தலுக்கான ஆதரவை சட்டத்தரணி செல்வராஜா டினேஸனுக்கு வழங்கியிருந்தார்.







# தமிழ் முற்போக்குக் கூட்டணி நுவரெலியாவில் வெற்றிபெறும்

## தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் உதயகுமார்

(க.கிஷாந்தன்)

ஜனாதிபதித் தேர்தல்களிலிலும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவு தெரிவிக்கும் வேட்பாளர்களே வெற்றி பெற்று வந்துள்ளார்கள். அந்த வகையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் மூன்று பேரும் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் அட்டன் செனன் தோட்டத்தில் இடம்பெற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

வேட்பாளர்கள் பழனி திகாம்பரம், வீ. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற ஒரு மாதத்துக்குள்ளாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதால் இது மலையக மக்களைப் பொருத்தவரையில் முக்கியமான ஒரு தேர்தலாகும்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே நுவரெலியா மாவட்டத்தில்தான் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். கடந்த கால ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவு தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ போன்ற வேட்பாளர்கள் மாவட்டத்தில் அதி கூடுதலான வாக்குகளைப் பெற்றிருந்தார்கள்.

கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் நாம் ஆதரவு தெரிவித்திருந்த ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கே கூடுதலான வாக்குகள் கிடைத்திருந்தது. எனவே நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் செல்வாக்கு அதிகரித்து காணப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்காவுக்கு 50 வீதத்துக்கும் குறைவான 42 சத வீத வாக்குகளே கிடைத்திருந்தது. அது ரணில் விக்கிரமசிங்க மீது மக்கள் கொண்டிருந்த அதிருப்தியின் வெளிப்பாடாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறக் கூடாது என்பதற்காக ரணில் விக்கிரமசிங்க மறைமுகமாக அநுராவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அரசு ஆட்சி அமைக்க பெரும்பான்மை பலம் கிடைக்காது. எதிரணியில் 120 ஆசனங்களை பெறக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. ஏனெனில், ஒரு மாத காலத்திலேயே ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்த வாக்காளர்கள் அதிருப்தி கொண்ட நிலையில் இருக்கின்றார்கள் குறிப்பாக ஆசிரிய சமூகம் அதிருப்தி கொண்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 300 இற்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். அதில் பெருமளவு சுயேச்சை குழுக்களின்வேட்பாளர்கள்இடம்பெற்றுள்ளனர். இவர்களின் நோக்கம் தேர்தலில் வெற்றி பெறுவது அல்ல, மாறாக தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு வாக்குகளைப் பிரிப்பதே அவர்களின் நோக்கமாகும்.

எது எப்படி இருப்பினும் இந்த மாவட்டத்தில் ஐந்து தமிழ் வேட்பாளர்கள் வெற்றி பெறுவது உறுதியாக உள்ளது. அதில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள்.

அதேநேரம், மாவட்டத்தில் போட்டியிடும் பல வேட்பாளர்கள் மக்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள். தேர்தல் காலத்தில் மட்டும் வந்து மக்களிடம் வாக்கு கேட்கும் அவர்கள் இதுவரை இங்குள்ள மக்களுக்கு செய்த சேவைகள் என்ன என்று கேட்டுப் பார்த்தால் பூஜ்ஜியமாகத்தான் இருக்கும்.

எனவே அறிமுகம் இல்லாத, இனி மேல்தான் சேவை செய்வோம் என்று கூறுகின்ற வேட்பாளர்களுக்கா, அல்லது இதுவரை காலமும் மக்களுக்கு சேவை செய்து அவர்களின் சுகதுக்கங்களில் இரண்டறக் கலந்துள்ள வேட்பாளர்களுக்கா வாக்களிக்க வேண்டும் என்பதை மக்களே சிந்தித்து ஒற்றுமையாக முடிவெடுக்க வேண்டும்.– என்றார்.





# இறந்த நிலையில் சிறுத்தை சாமி மலை பகுதியில் மீட்பு!

(மஸ்கெலியா)

சாமி மலை பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை சாமிமலை பகுதியில் உள்ள ஸ்டொக்கம் தோட்ட ஸ்காபிரோ பிரிவில் உள்ள அதி உயர் மின் மாற்றி பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தை ஒன்று உள்ளது என பணிக்கு சென்ற தொழிலாளர்கள் தோட்ட முகாமையாளருக்கு அறிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து தோட்ட நிர்வாகம் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து நல்லதண்ணி வனத்துறை அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வந்தார் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார.

வன பாதுகாப்பு அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று இறந்த நிலையில் காணப்பட்ட சிறுத்தையை மீட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ள பேராதெனிய மிருக வைத்திய சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.






# கல்முனை மாநகர திண்மக் கழிவகற்றல் வாகனங்களை துரிதமாக திருத்த நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் பழுதடைந்துள்ள திண்மக் கழிவகற்றல் சேவை வாகனங்களை துரிதமாக திருத்தி முடிக்குமாறு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் சேவைக்கு உரிய வாகனங்களில் ஒரு கொம்பெக்டர் மற்றும் 04 உழவு இயந்திரங்கள் உட்பட 06 வாகனங்கள் பழுதடைந்துள்ளன. இந்த நிலையில் அவை திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

எனினும் குறித்த வாகனங்களின் திருத்த வேலைகள் தாமதமடைவதால் திண்மக் கழிவகற்றல் சேவையை முன்னெடுப்பதில் பாரிய அசௌகரியங்கள் ஏற்படுவதாக மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் மாநகர ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதையடுத்து வாகன திருத்தும் தளத்துக்கு இன்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இயந்திர திருத்துனர்களுக்கு ஆணையாளர் இந்த பணிப்புரையை விடுத்திருக்கிறார்.

இதன்போது வாகனங்களை திருத்தி முடிப்பதில் நிலவும் தாமதத்துக்கான காரணங்களை கேட்டறிந்து கொண்ட ஆணையாளர் அவற்றை துரிதமாக திருத்தி சேவையில் ஈடுபடுத்த வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் இவற்றுக்கு தேவையான உதிரிப்பாகங்களைத் துரிதமாகக் கொள்வனவு செய்து வழங்குமாறும் திருத்துனர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் டிலிப் நௌஷாட் உள்ளிட்டோரும் பிரசன்ன மாகியிருந்தனர்.

# ஒரு குடையின் கீழ் மக்களை அழைக்கின்றார் ஜெகசுதன்!

(வடிவேல் டினேஸ்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதி நிதித்துவத்தை உறுதிப்படுத்துவதில் மக்கள் முன்னிப்பார்கள் என்ற நம் பிக்கை எனக்கு உள்ளது.

இவ்வாறு தமிழிழரசுக் கட்சியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் சட்டத் தரணி குபேந்திரராஜா ஜெகசுதன் குறிப் பிட்டார்.

அம்பாறை அக்கரைப்பற்றில் வெள் ளிக்கிழமை (17) இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பு பிளவு தொடர்பில் மக்களிடையே பல விமர்ச னக் கருத்துக்கள் நிலவுகின்ற வேளை நாம் ஒன்றை சிந்திக்க வேண்டும்.

எந்த கட்சிக்ளுக்குள் பிளவில்லை? இலங்கை சுதந்திரக் கட்சி இன்று பிளவு பட்டுள்ளது. ஜே.வி.பி. மாற்றமடைந்து இன்று என்.பி.பி. என தோற்றமளிக் கின்றது.

அதே போன்று நாட்டின் பிரபல தேசிய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை என்ன ? இன்று அவை




மாற்றமடைந்துள்ளது.

எனவே பிளவு என்பது எங்கிலும் இருக்கின்றது இவ்வாறான கட்சி பிளவு என்பது தற்காலிகமானதே.

இவ்வாறான பிளவுகள் புது வடிவத் தில் மக்களுக்கான தீர்வாக இருக்கும்.

அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற் காகவும் அதனை தக்க வைத்துக்க கொள்வதற்காகவும் அதிகார ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் ஒரு கட்சியின் குறைபாட்டை வேறு கட்சி மீது சுமத்தி தங்களுடைய வாக்கு பலத்தை அதிகரிக்கும் முனை வுகளு முன்னெடுக்கலாம் அத்தகைய சதி திட்டங்களுக்குள் அகப்படாமல் மக்கள் கவனமாக செயற்பட வேண்டும்.

திருக்கோவில் பிரதேச இல்மனைட் அகழ்வு , வைத்தியசாலை பிரச்சினை, வளப்பற்றாக்குறை, கால்நடைகளுக் குரிய மேய்ச்சல் தரை பிரச்சினை எது வாக இருந்தாலும் சரி எமது பகுதியில் இன்னும் அவற்றுக்கான தீர்வு இல்லை.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மக்களது வாக்குகள் வீணடிக்கப்பட்டு திகாமடுல்லயில் தமிழர் பிரதி நிதித் துவம் இழக்கப்பட்டதை போன்று இந்த முறையும் அதே பாணியிலான வாக்கு பிரிவு சூழ்ச்சி இடம் பெறுகின்றது.

மக்களது எதிர்பார்ப்பைத் தமிழரசுக் கட்சி கவனத்தில் கொண்டு இந்த முறை படித்த இளைஞர்களை வேட்பாளர்களாக உள்வாங்கியுள்ளதை மக்கள் நன்கு அறிவர். எனவே தற்போதைய நிலை யில் மக்கள் ஒரு குடையின் கீழ், ஒரு பிரிவினருக்கு ஆதரவு வழங்கினால் மாத்திரமே வாக்குப் பிளவு அடையாமல் பிரதிநிதித்துவம் காக்கப்படும்.

எனவே மக்கள் ஒரு குடையின் கீழ் நின்று திகாமடுல்ல பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும்.– என்றார்.







# திருக்கோவில் வலய முன்பள்ளி ஆசிரியர்களது ஆசிரியர் தினம்

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் வலய முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் களுக்கான ஆசிரியர் தின நிகழ்வும், கடந்த முப்பது வருடங்களுக்கு மேலான சேவையைச் செய்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் அளப்பரிய சேவை நலன் பாராட்டு நிகழ்வும் திருக்கோவில் காஞ்சிரங்குடா வள நிலையத்தில் (14) திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றன.

திருக்கோவில் வலய முன்பள்ளி பாடசாலைகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. விவேகானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் கலந்து கொண்டார்.

திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார், மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். நிமலரஞ்சன் மற்றும் பல அதிதிகளும் கலந்து கொண்டனர்.

திருக்கோவில் வலயத்துக்கு உட்பட்ட முன்பள்ளிகளில் கடமையாற்றும் 170 முன்பள்ளி ஆசிரியர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.





# ஆசிரியர் தின விழாவும் சேவை நலன் பாராட்டும்

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன் னிட்டு சம்மாந்துறை வலயத்துக்கு உட் பட்ட வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழா வும் சேவை நலன் பாராட்டு விழாவும் அதிபர் கே.தியாகராஜா தலைமையில் நேற்று முன்தினம் (16) புதன்கிழமை நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும், சிரேஷ்ட ஊடகவியலாள ருமான விபுலமாமணி வித்தகர் வீ. ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதியாக பாடசாலை இணைப்பாளரும், விவசாய வளவாளரு மான பி. மோகன் கலந்து கொண்டார்.

பாடசாலை பழைய மாணவர் மன்றம் மற்றும் உயர்தர மாணவர்கள் இணைந்து நடத்திய இந்த விழாவில் முன்னதாக ஆசிரியர்களை மகிழ்விக் கும் வகையில் சில விளையாட்டு நிகழ் வுகள் இடம் பெற்றன.

தொடர்ந்து ஆசிரியர் தின நிகழ்வு உயர்தர மாணவர்கள் ஏற்பாட்டில் இடம் பெற்றது. அதில்சகலஆசிரியர்களுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி கௌர விக்கப்பட்டது.







சம்மாந்துறை வலயத்தில் 26 வருடங்கள் கடமையாற்றி 36 வருடம் கல்விச்சேவை ஆற்றி கடந்த வாரம் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



# முஷாரப்பின் அரசியல் செயற்பாட்டாளராக ரனூஸ் மக்கள் காங்கிரஸில் இணைவு!

(அபு அலா)

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் முன்னாள் தலைவரும், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான சம்மாந்துறையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.ஐ.எம்.றனூஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ ில் இணைந்து கொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளர் எம்.எம்.ஏ.காதர் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான ஐ.எல்.மாஹிர் முன்னிலையில், அவரது சம்மமாந்துறை அலுவலகத்தில் இணைந்து கொண்டார்.

சட்டத்தரணி றனூஸ், ஆரம்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதியாக அவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்புடன் மிகவும் நெருக்கமாக இருந்து கொண்டு அவரின் அரசியலில் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார்.

அந்தக் காலப் பகுதியிலேயே கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக றனூஸ் நியமனம் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் மொழி பயிற்றுவிக்கும் திட்டம்!

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற் பாட்டில் அரசகரும மொழிகள் திணைக் களத்தின் அனும தியைப் பெற்று இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியானது அரச அலுவலர்களுக்காக நேற்று (18) வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ. ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். காரைதீவு பிரதேச செயலாளர் கணேசமூர்த்தி அருணன், உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன் மற்றும் நலன்புரிச்சங்க செயலாளர் செ. கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.







# வடக்கில் போதையின் பரிணாமம்!




மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு என்பார்கள். இது வடக்கில் சமூகப் பிரச்சினைகளில் பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது. மது குடிப்பவர்களை மட்டுமல்ல அவர்களை சார்ந்தவர்களையும் பாதிக்கின்றது.

உயிரை பறிப்பது மட்டுமல்லாது அவர்களது வாழ்வை நாசமாக்கி விடுகிறது. மதுப் பழக்கத்தால் ஆண்டு தோறும் பலர் இறக்கின்றனர் என்பதை உணர்ந்தும் அந்தப் பழக்கம் சமூகத்தில் குறைந்ததாக இல்லை.

அரசும் அதை தடை செய்வதாக இல்லை. சமுதாய மானது நட்பு, பழக்க வழக்கங்கள், ஒழுக்கம் முதலானவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. இதனால் தான் பஞ்சமா பாதங்களில் ஒன்றாக மது அருந்துதலை பார்த்தார்கள். மதுப்பழக்கம் அருந்தத் தகாததாகவும் வெறுக்கத்தக்கதாகவும் நம் முன்னோர்களால் பார்க்கப்பட்டது.

ஆனால், இன்றைய நவீன உலகமானது மதுப் பழக்கத்தை நாகரீகமாக பார்க்கின்றது. மதுவை வெறுத்த மூத்த குடியின் வழிவந்த நம் சமுதாயம் மேற்கத்தேய கலாச்சாரங்களால் கவரப்பட்டு மதுப் பாவனையைத் தமது சொந்த வீட்டு நிகழ்வுகளின் போது பயன்படுத்திக் கொள்கின்றனர். இது மாபெரும் ஒழுக்க சீர்கேடாகும்.

இன்று இலங்கையில் பொருளாதார உயர்வு பெற்றுக் கொடுக்கும் தொழில்துறையாக மதுபான உற்பத்திகள் அதிகரித்துள்ளன.

ஒரு சமூகத்துக்குச் சாதி ஒழிப்பு எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு மது ஒழிப்பும் அவசியமாகும். உழைக்கும் வர்க்கமான அடித்தட்டு வர்க்கமே மதுவால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தன. இவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த மது ஒழிப்பு அவசியமாகும்.

இலங்கையை பொறுத்தவரையில் வடக்கில் போதைப் பொருள் பழக்கம் கடல் கடந்து வரக் கூடிய நிலைமையானது மிகவும் மோசமானதாக இருக்கின்றது. மதுபான விற்பனையின் மூலம் அரசுக்கு வடக்கில் இருந்து அதிக வருவாயை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

மதுபானம் மட்டுமல்லாமல் அங்கு அதிகமானவர்கள் போதைப் பொருள் பாவனைக்கும் உள்ளாகியுள்ளனர் என குறிப்பிடப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டோடு ஒப்பிட்டால் பியர் மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகள் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டிருப்பதாகப் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற உள்ளூர் பானமாகிய கள்ளும் பல மடங்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருப்பது தெரிய வருகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு 7,69,000 லீட்டருக்கு அதிகமான அளவு பியர் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆனால் 2013 ஆம் ஆண்டு 40 கோடி 50 லட்சம் லீட்டர் பியர் விற்பனையாகி இருக்கின்றது. இதேபோல 2009 ஆம் ஆண்டு 65 லட்சத்து 98 ஆயிரம் லீட்டர் வெளிநாட்டு மதுபான வகைகள் விற்பனை செய்யப்பட்டு இருப்பதோடு, இது 2013 ஆம் ஆண்டில் 6 கோடி 11 லட்சத்து 32 ஆயிரம் லீட்டராக அதிகரித்துள்ளது. 2009 ஆம் ஆண்டில் 35 கோடியே 19 லட்சத்து அறுபதாயிரம் லீட்டராக இருந்த கள்ளின் விற்பனை 2013 ஆம் ஆண்டில் 566 கோடியே 3,60,000 லீட்டராக அதிகரித்துள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்திலேயே நகரப் பகுதிகளில் எங்கும் பல இடங்களிலும் மது விற்பனை நிலையங்கள் மது அருந்தும் இடங்களுக்கான அனுமதி பத்திரங்கள் அதிகமாக வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



தருமலிங்கம் லுகிர்தா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கையில் போதைப்பொருள் பாவனைக்கு ஆளானவர்களுக்கு நாளடைவில் மூச்சுத்திணறல், இருமல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதோடு உணவு குழாயிலும் கணையத்திலும் கல்லீரலிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. சரியாக உணவு எடுத்துக் கொள்ள முடியாமல் போவதால்

வயிற்றில் புண், எடை குறைவு, நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, உடல் சோர்வு போன்ற பிரச்சனைகள் உண்டாகின்றன. சிந்தனை திறன் குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு தனக்கு ஏதாவது நடந்து விடுமோ என்று கற்பனை செய்து அதன் படி நடந்து கொள்வது போன்ற மனநிலை பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. போதைப்பொருள் பானையால் இலங்கையில் கல்வி நிலையும் குறைவடைந்து காணப்படுகின்றது. ஒரு காலத்தில் கல்வி நிலையில் வட இலங்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணமே மிகச் சிறப்பான கல்வி நிலையை கொண்டதாக காணப்பட்டது. ஆனால் தற்போது இந்தப் போதைப் பொருளின் பாவனை காரணமாக கல்வியிலும் பல சீர்கேடுகள் நடைபெற்று வருகின்றன.

வாகனம் ஓட்டுபவர்கள் போதை பொருளை பயன்படுத்துவதால் வட இலங்கையில் அதிகமான உயிரிழப்புகள் ஏற்படுத்தப்படுவதோடு அதிகமான வீதி விபத்துகளும் அதிகரித்த வண்ணமாகவே உள்ளன.

இந்த மதுப்பாவனையின் காரணமாக சமூக அந்தஸ்து விலக்கப்படுகின்றது. போதை மற்றும் குடிப்பழக்கம் உடையவர்கள் செய்கிற குற்றச் செயல்களால் சமுதாயத்தில் மரியாதை குறைவு, சமூக புறக்கணிப்புஎன்பவை ஏற்படுகின்றன. மற்றும் பண பிரச்சினைகளும் உண்டாகிறது.

வீட்டுச் சூழலில் பயன்படுத்திய போதைப் பொருள்களை பிள்ளைகள் நாளடைவில் சமூக சூழலில் சக தோழர்களுடன் தொடர்ந்து பழகிக் கொள்ள முனைகின்றனர். சிலவேளை வீட்டுச் சூழலில் சிகரெட் புகைத்தல் மது அருந்துதல் போன்றவை இல்லாவிட்டாலும் சமூக சூழ்நிலை அதைப் பயன்பாட்டில் இருக்குமாயின் அவர்கள் இலகுவில் போதைக்கு ஆளாகி விடுகின்றனர்.

குடும்பத்தில் எல்லா பிள்ளைகளுக்கும் பெற்றோர்கள் சரிசமமான அன்பு பாசம் காட்டி அரவணைக்க வேண்டும். இவை கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் தங்களுக்கு ஏற்படும் மனம் முறிவை போக்க போதையை பயன்படுத்தி தீர்வுகாண முனைகின்றனர்.

பொதுவாழ்வில் ஏற்படும் போட்டி பரிட்சை சூழலுக்கு முகம் கொடுக்க முடியாமல் சவால்களை சந்திக்க முடியாமல் போலி மனப்பான்மைக்கு ஆளாகும்போது போதையே நாடுகின்றனர். பரீட்சையில் தோல்வி, தீர்க்க முடியாத பிரச்சினை என்னும் போது அவற்றுக்கு தீர்வாக போதையை பயன்படுத்துகின்றனர்.

தொடர்ச்சி ▼

# வடக்கில் போதையின் பரிணாமம்!

தொடர்ச்சி▲

இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் அதிகளவான போதைப் பொருள்கள் பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து கொண்டுவரப்படுவதாகவும் ஆபத்தான போதை பொருள்களை கட்டுப்படுத்தும் அதிகார சபையின் அறிக்கை தெரிவிக்கின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம் இலங்கையில் சுமார் 40 ஆயிரத்துககும்



மேற்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு நிரந்தரமாக அடிமையாகி உள்ளனர் என்று தேசிய போதை தடுப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

குறிப்பாக இளைஞர்களிடையே பாவனை சடுதியாக அதிகரிப்பதை அது சுட்டிக்காட்டி உள்ளது. கடந்த ஆண்டில் போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட 29,790 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 60மூ ஆனவர்கள் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் 35 சதவீதமானவர் 20 வயதை நெருங்கியவர்கள் ஆவர்.

கடந்த ஒரு சில வருடங்களில் சிறுவர்கள் இடத்தில் குறைந்திருந்த போதைப்பொருள் பாவனை மீண்டும் நாட்டில் தலை தூக்கி வருவதாகவும் புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது.

உலக அளவில் சுமார் 140 மில்லியன் குடிகாரர்கள் இருக்கின்றனர் என்று உலக சுகாதார அமைப்பும் மதிப்பிட்டுள்ளது. மதுபான பாவனை வரிசையில் உலக அரங்கில் இலங்கைக்கு நான்காவது இடம் கிடைத்திருக்கிறது.

சமூக வறுமையுடன் கூடிய அவல வாழ்க்கையை மறக்க கூடிய ஒரு தீர்வாக கையாளப்படுகின்றது. குடி சமூக பிரச்சினைக்கு வழிகோலாகின்றது. இதன் விளைவாக நகரப்புற குடிசை பகுதிகளில் 43 சதவீதமானவர்கள் மதுவுக்கு அடிமையாகி விட்டனர். பெருந்தோட்ட பகுதிகளில் இது 55 சதவீதமாக உள்ளது. பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் 18 சதவீதம் மதுவுக்கு அடிமையாக உள்ளனர்.

இது தவிர இதற்காக அவர்கள் சராசரியாக செலவழிக்கும் பணம் நாளொன்றுக்கு 09 கோடியே 5,10,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. போதை வஸ்துக்கு அடிமையாகி உள்ளவர்கள் 50 வீதமானவர்கள் திருமணமாகாத இளைஞர்கள் அவர்.

இவர்களில் பலர் பல்கலைக்கழகம் உயர்தர, சாதாரண தரமானவர்கள் ஆவர். திருமணமானவர்களில் 50 வீதமானவர்களும் 69 வீதம் பாடசாலை மாணவர்களும் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் அறிக்கை குறிப்பிடுகின்றது.

இலங்கையில் மொத்த குற்ற செயல்கள் 38 சதவீதமானவை மதுபானையில் ஏற்படுகிறது. கடந்த ஆண்டில் நடந்த மொத்த வாகன விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை 2800 ஆகும் இதில் 90 சதவீதமானவை மதுவால் நடந்துள்ளது. ஒட்டு மொத்தத்தில் கொலை, பாலியல் வன்முறை, விபச்சாரம் போன்றவை தேசிய பண்பாகி கொடி கட்டி பறக்கிறது.

போதைப்பொருள் பாவனையில் இலங்கையில் முதலாம் இடமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகிறது. அடுத்தாக 71 வீதமாக இரண்டாவதாக கம்பா மாவட்டம் உள்ளது.

நாட்டில் கடந்த ஆண்டுகளில் ஹெரோயின் எனும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இலங்கையில் 12 சதவீதமான போதைப்பொருள் பாவனையாளர்கள் ஊசி மூலமே போதை ஏற்றுவதாக அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

இவர்கள் குடும்பப் பிரச்சினை கல்வியில் தோல்வி மற்றும் கூடாத சகவாசம் போன்ற பல காரணங்களுக்காக இந்த பழக்கத்துக்கு அடிமையாகிறார்கள். இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை உல்லாச பயணிகளின் வருகை போன்ற காரணங்களினால் நவீன போதைப் பொருள்கள் நாட்டின் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளன. இந்தப் போதைப் பொருள்கள் கடந்த ஆண்டுகளில் இலங்கையில் பரவ ஆரம்பித்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் போதைப் பொருள்கள் அதிகரித்துள்ளது. இதில் இரண்டு கிராம் சுமார் 500 பேர் பாவித்து போதை ஏற்றிக் கொள்ள முடியும் வெளிநாடுகளில் இலட்சக் கணக்கானோர் இதனால் பாதிக்கப்பட்டு தண்டனைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

மதுபானையை குறைக்க முற்படும் திணைக் களங்களாக இலங்கை பொலிஸ் திணைக்களம், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு, மதுவரி திணைக்களம், சிறைச்சாலைகள், சுங்கவரி திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் காணப்படுகின்றன.

இதே போல இலங்கையில் போதைப் பொருள் பாவனை ஒழிப்பதற்காக பல தடுப்பு நிலையங்களும் பணியயங்களும் செயற்பட்டு வருகின்றன.

ஆனாலும், இந்த முறைகேடான பழக்கத்தை இலங்கையில் தவிர்க்க முடியாது உள்ளது. இந்த போதைப்பொருள் பாவனை சிறுபராயத்திலே ஏற்பட்டு விடுவதால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக அவர்கள் தனிமையை விரும்பினால் அடிக்கடி பணம் கேட்டால், படிப்பில் நாட்டம் குறைந்தால் நடத்தைகளில் மாற்றம் தெரிந்தால் வழக்கத்துக்கு மாறாக நடவடிக்கை தென்படுமாயில் அவர்களை சற்று கூர்ந்து அவதா னிப்பது சிறந்தது.

முக்கியமாக இன்றைய இளம் சமுதாயம் இணையத் தளத்தை தங்கள் உலகமாக கருதி வாழ்வதால் அடிக்கடி அவர்கள் பார்க்கும் இணையதளங்கள் குறித்து பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவற்றைத் தவிர சிறு வயதிலிருந்தே கற்றலில் அதிக நாட்டம் ஏற்படுத்த பத்திரிகை வாசித்தல், விளையாடுதல், இறை வழிபாடு செய்தல் போன்ற பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தல் சிறந்தது. இதன் மூலம் இன்று குழந்தைகளை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம். மாறாக அவர்கள் யாராயினும் போதைப் பொருளுக்கு அடிமையாகி விட்டார்கள் எனின் மருத்துவர்களாயினும் உள துணையாளர்களின் ஆலோசனைப்படி செயலாற்றுவது நல்ல பலனாக இருக்கும். இது அவர்கள் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பச் செல்லாமல் இருக்கவும் வழி சமைக்கும்.

# தமிழ் பற்றை இனவாதம் என்றால் அது எங்களுக்குப் பெருமைதான்

## ஆளுநருக்கு முதல்வர் ஸ்டாலின் பதில்

"இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் வரலாறுகளைத் தாங்கி நிற்கும் மண் இது. இந்த மண்ணின் தாய்மொழிப் பற்றினை இனவாதம் என்றால் அது எங்களுக்குப் பெருமைதான்,"

– இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"இந்தி மாதக் கொண்டாட்ட நிறைவு விழாவில் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்தில், 'தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்' என்ற வரியைப் பாடாமல் விட்டதற்கு, எனது கடும் கண்டனத்திற்குப் பதிலளித்துள்ள ஆளுநருக்குச் சில கேள்விகள்: 'தமிழ்த்தாய் வாழ்த்தை முழுமையாக பக்திச்சிரத்தையோடு பாடுவேன்' எனச் சொல்லும் நீங்கள், முழுமையாகப் பாடப்படாத தமிழ்த்தாய் வாழ்த்தை உடனே மேடையிலேயே கண்டித்திருக்க வேண்டாமா? அதனை ஏன் செய்யவில்லை? 'பெருமையோடு துல்லியமாகப் பாடுவேன்' என விளக்கம் கொடுக்கும் ஆளுநர் – உரிமையோடு அந்த இடத்திலேயே தவற்றைச் சுட்டிக் காட்டியிருக்கலாமே! சரியாகப் பாடும்படி பணித்திருக்கலாமே? துல்லியமாக அந்தச் செயலை நீங்கள் செய்திருந்தால் எதிர்வினை ஏற்பட்டிருக்குமா?

'ஒரு ஆளுநருக்கு எதிராக முதலமைச்சர் இனவாதக் கருத்தைத் தவறான குற்றச்சாட்டுகளுடன் முன்வைப்பது துரதிருஷ்டவசமாக மலிவானது' எனச் சொல்லியிருக்கிறீர்கள். ஆளுநர் அவர்களே, தமிழ் எங்கள் இனம்! அது எங்கள் உயிர்மூச்சு! தமிழ்மொழியைக் காக்க உயிர்களை நெருப்புக்குக் கொடுத்தவர்கள் தமிழர்கள். முதல் அரசமைப்புச் சட்டத்திருத்தத்திற்கு அடிகோலியதோடு, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் வரலாறுகளைத் தாங்கி நிற்கும் மண் இது. இந்த மண்ணின் தாய்மொழிப் பற்றினை இனவாதம் என்றால் அது எங்களுக்குப் பெருமைதான்!

'பா.ஜ.க. அரசு பல்வேறு அமைப்புகளை நிறுவித் தமிழ்மொழி மற்றும் அதன் பாரம்பரியத்தைத் தமிழ்நாடு உள்பட இந்தியாவுக்கு உள்ளேயும் உலகின் பல நாடுகளிலும் பரப்புகிறது. ஐக்கிய நாடுகள் சபைக்கும் கூட தமிழைக் கொண்டு சென்றார் பிரதமர் மோடி' எனச் சொல்லியிருக்கிறார் ஆளுநர்.

தமிழ்மீது மத்திய பா.ஜ.க. அரசுக்குப் பற்றிருப்பது உண்மையானால், உலகப் பொதுமறையான திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்காமல் உங்களைத் தடுப்பது எது? பிரதமர் மோடி அறிமுகப்படுத்தும் திட்டங்கள், தொடர்வண்டிகள், முன்வைக்கும் முழக்கங்கள் என 'எங்கும் இந்தி – எதிலும் இந்தி' என்ற கொள்கையுடன் இந்தியைத் திணிப்பது நீங்கள்தான்.



ஆளுநராகப் பொறுப்பேற்றதிலிருந்து அரசியல்சட்ட நெறிமுறைகளை மறந்து நாள்தோறும் அரசியல் பேசுவதும், ஆளுநர் மாளிகையை அரசியல் அலுவலகமாக மாற்றியதும் – திராவிட இனத்தையே கொச்சைப்படுத்திப் பேசி வருவதும் எந்த வகை அரசியல் நாகரிகம்? எந்த வகை கண்ணியம்? சட்டப்பேரவையில் நீங்கள் படிக்க வேண்டிய ஆளுநர் உரையில் கூட திராவிட மாடல், தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற பெயர்களைத் தவிர்த்தவர்தானே நீங்கள்?

உங்கள் வரலாறு இப்படி இருக்கும்போது, 'திராவிட நல்திருநாடு' தவிர்க்கப்பட்டதைத் தற்செயலானது எனத் தமிழர்கள் எப்படி நம்புவார்கள்? அரசியலமைப்புச் சட்டப் பதவியில் சட்டப்புத்தகத்தின்படி பொறுப்பேற்றவர், வகுப்புவாதக் கும்பலின் கைப்பாவையாக மாறி, பிளவுவாத அழிவு விஷக் கருத்துகளைத் தமிழ்மண்ணில் விதைக்க நினைத்தால் அதன் வேரில் வெந்நீர் ஊற்றுவார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

நீங்கள் ஆளுநர் பதவியில் தொடர நினைத்தால், பிளவுவாத சக்திகளிடமிருந்து விடுவித்துக்கொண்டு, அரசியல்சட்ட நெறிமுறைகளின்படி கடமையை ஆற்ற வேண்டும் என உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஜார்க்கண்ட் தேர்தலில் 68 தொகுதிகளில் பா.ஜ.க: கூட்டணி கட்சிகளுக்கு 13 இடங்கள் ஒதுக்கீடு

ஜார்க்கண்ட் பேரவைத் தேர்தலில் 68 தொகுதிகளில் பா.ஜ..க போட்டியிடவுள்ளது. கூட்டணிக் கட்சிகளுக்கு 13 இடங்களை பா.ஜ.க. மேலிடம் ஒதுக்கியுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மொத்தம் 81 சட்டப் பேரவைத் தொகுதிகள் உள்ளன. இந்த 81 தொகுதிகளுக்கும் நவம்பர் 13, நவம்பர் 20 என இரு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட உள்ளது. இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் நவம்பர் 23 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். இந்தத் தேர்தலில் அகில ஜார்க்கண்ட் மாணவர் யூனியன் (ஏ.ஜே.எஸ்.யு), ஐக்கிய ஜனதா தளம், சிராக் பாஸ்வானின் லோக் ஜனசக்தி (எல்.ஜே.பி) ஆகிய கட்சிகளுடன் பா.ஜ.க கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது. இந்நிலையில் நேற்று பா.ஜ.க தலைமையிலான



தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித்தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் முடிவில் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டு அறிவிக்கப் பட்டது.

இதுகுறித்து அசாம் முதல்வரும், ஜார்க்கண்ட் பேரவைத் தேர்தல் பா.ஜ.க. இணைப் பொறுப்பாளருமான ஹிமந்த பிஸ்வா சர்மா குறிப்பிடுகையில், "எதிர்வரும் ஜார்க்கண்ட் பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. 68 இடங்களில் போட்டியிடும். எஞ்சியுள்ள 13 தொகுதிகளில் கூட்டணிக் கட்சிகள் போட்டியிடும். அதன்படி ஏ.ஜே.எஸ்.யு. 10 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதா தளம் 2 தொகுதிகளிலும், எல்.ஜே.பி. ஒரு தொகுதியிலும் போட்டியிடும். இதற்காக கூட்டணிக் கட்சிகள் ஒருமித்த முடிவுக்கு வந்துள்ளன."– என்றார்.





# ஹமாஸ் தலைவர் யாஹியா சின்வர் தலையில் குண்டு பாய்ந்து உயிரிழந்தார்

## பிரேத பரிசோதனை அறிக்கை வெளியானது




ஹமாஸ் பிரிவு தலைவர் யாஹியா சின்வர் தலையில் குண்டு பாய்ந்து உயிரிழந்துள்ளார், இறப்பதற்கு முன்பு அவரின் முன்கை உடைக்கப்பட்டு, அதனால் அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது என்று சின்வரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சின்வர் தலையில் குண்டு துளைக்கும் முன்பு கடுமையாக காயமடைந்திருந்தார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தது ஹமாஸ் தலைவர்தானா என்பதை உறுதி செய்ய 61 வயதான சின்வரின் விரல் ஒன்று வெட்டப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

யாஹியா சின்வரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் அறிக்கையை மேற்பார்வையிட்ட இஸ்ரேல் தேசிய தடையவியல் நிறுவனத்தின் இயக்குநர் மருத்துவர் சென் குகேல் செய்தித்தாள் ஒன்றிடம் தெரிவிக்கையில்,

"யாஹியா சின்வர் தலையில் குண்டு தாக்கி ஏற்பட்ட காயத்தால் உயிரிழந்துள்ளார். ஒரு சிறிய வகை ரொக்கெட் அல்லது டேங்க் குண்டு தாக்குதலுக்கு உள்ளான பின்னர் அவரது முன்னங்கை உடைந்து ரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. மின்சார கம்பியைப் பயன்படுத்தி அவர் ரத்தப்போக்கினை நிறுத்த முயற்சி செய்துள்ளார். ஆனால் அது முழுவதுமாக பலனளிக்கவில்லை. அந்த அளவுக்கு பலம் அவரிடம் அப்போது இல்லை.

சின்வர் இறந்து 24 முதல் 36 மணி நேரத்துக்கு பின்னர் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அது முடிந்த உடன் சின்வரின் உடல் இஸ்ரேல் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதனை அவர்கள் யாரும் அறியாத இடத்துக்கு கொண்டு சென்றிருக்கலாம்.

டி.என்.ஏ. சோதனை மூலமாக சின்வரின் அடையாளம் உறுதி செய்யப்பட்டது. அவரது விரல் துண்டிக்கப்பட்டு இஸ்ரேல் இராணுவத்தினால் ஆய்வு அனுப்பப்பட்டது. ஆய்வகம் தனது அறிக்கையைத் தயார் செய்த பின்பு அது, சின்வர் இஸ்ரேலில் கைதியாக இருந்தபோது தயாரிக்கப்பட்ட தகவல்களுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. அதன் மூலம் இறுதியாக டி.என்.ஏ மூலம் அவரது அடையாளத்தினை நாங்கள் உறுதி செய்தோம். " – என்றார்.

இதேவேளை, ஹமாஸ் பிரிவு தலைவர் யாஹியா சின்வர் தங்கியிருந்த கட்டடம் தாக்கப்பட்டபோது எடுத்த ட்ரோன் வீடியோவை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டது.

தெற்கு காசாவின் ரஃபா பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தினர் கடந்த புதன் கிழமை வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது ஒரு கட்டடம் அருகே சென்றபோது, அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இதையடுத்து அந்த கட்டடத்தை இஸ்ரேல் இராணுவ டேங்க் குண்டு வீசி தகர்த்தது. அதன்பின் அந்த கட்டடத்துக்குள் யாரும் இருக்கிறார்களா என்பதை அறிய ட்ரோன் கேமரா பறக்க விடப்பட்டது. கட்டடத்தின் இடிபாடுகளுக்கு இடையே ஷோபா ஒன்றில் ஒரு வயதான நபர் தனது முகத்தை மறைத்தபடி அமர்ந்திருந்தார். அவர் அருகே ட்ரோன் கேமரா பறந்து வந்தபோது, அவர் ஒரு மரக்கட்டையை எடுத்து ட்ரோன் மீது வீசும் காட்சி பதிவாகியது.

இதையடுத்து அந்த கட்டடத்தின் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அந்த நபர் இறந்தார். அவர் ஹமாஸ் தலைவர் யாஹியா சின்வர் என்பது பயோமெட்ரிக் ஆவணங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டது.

ட்ரோன் கேமரா மீது யாஹியா சின்வர் கட்டையை தூக்கி வீசும் வீடியோவை சமூக ஊடகத்தில் இஸ்ரேல் இராணுவம் நேற்று வெளியிட்டது.

பக்கங்கள் 02

கனடா முரசு

சனிக்கிழமை 19/10/2024

## லட்வியாவில் கடமையாற்றிய கனடிய படைவீரர் உயிரிழப்பு

லட்வியாவில் கடமையாற்றி வந்த கனடிய படைவீரர் கொல்லப்பட்டுள்ளார்.

லட்வியாவின் தலைநகர் ரிகாவில் இந்த படைவீரர் உயிரிழந்துள்ளார். ஆரோன் வைட்மேன் 02



# ட்ரூடோவை பதவி விலகுமாறு புதனன்று கோருவதற்கு கட்சி உறுப்பினர்கள் தீர்மானம்

**கனடாவில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவை கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகுமாறு கோருவதற்கு தீர்மானித்துள்ளதாக ஒரு தொகுதி கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.**

**எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் கூட்டத்தில் ட்ரூடோவிடம் நேரடியாக கேட்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

எதிர்வரும் தேர்தலில் கட்சியின் நலனுக்காக ட்ரூடோ ஒதுங்க வேண்டும் என்ற குழுவினர் கோரிக்கை விடுக்க உள்ளனர்.

ரொறன்ரோ மற்றும் மொன்றியலில் நடைபெற்ற இரண்டு இடைத்தேர்தல்களில் லிபரல் கட்சி அண்மையில் தோல்வியைத் தழுவியிருந்தது.

இந்த தேர்தல்களின் போது பிரதமர் அலுவலகம் உரிய முறையில் செயற்படத் தவறியதாகவும் இது ஏமாற்றமளிப்பதாகவும் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். அட்லாண்டிக் கனடாவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மீது தங்கள் அதிருப்தியை வெளி யிட்டுள்ளனர்.

இதேவேளை, உட்கட்சி பூசல்கள் தொடர்பில் பேசுவதற்கு இது பொருத்தமான தருணம் இல்லை எனவும் நாட்டுக்கு வெளிநாடுகளினால் ஏற்படக்கூடிய சவால்களை வெற்றி கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

# கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் பேய் போன்று வேடம் தரித்து கொள்ளை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணம் குயில்ப் பகுதியில் பேய் போன்று வேடம் தரித்து கொள்ளைச் சம்பவமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கத்தி முனையில் இந்த கொள்ளை இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கத்தி முனையில் வர்த்தக நிறுவனத்தின் காசாளரை அச்சுறுத்தி கொள்ளையிடப்பட்டுள்ளது.

ஒருவர் பேய் போன்றும் மற்றையவர் அருட் சகோதரி போன்றும் வேடமிட்டு கொள்ளையில் ஈடுபட்டனர் என காணொலிகள் மூலம் தெரிய வந்துள்ளது.

முதலில் இது ஓர் குறும்பு செயல் என தாம் பெரிதாக கண்டுகொள்ளவில்லை எனவும் பின்னர் இருவரும் கொள்ளையிட வந்தவர்கள் என்பதனை புரிந்து கொண்டதாகவும் நிறுவனத்தின் காசாளர் தெரிவித்துள்ளார்.






# இந்திய - கனடா முரண்பாடு பயணங்களைப் பாதிக்கும்

புலம்பெயர் சமூகத்தினர் வெளியிடப்பட்டுள்ள கரிசனை

இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமையானது நாடுகளுக்கு இடையிலான பயணங்களை பாதிக்கும் என கரிசனை வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய புலம்பெயர் சமூகத்தினர் இந்த கரிசனையை வெளியிட்டுள்ளனர்.

கனடிய பிரஜைகளை கொலை செய்தமை, கொள்ளையிட்டமை, கப்பம் கோரியமை உள்ளிட்ட பாரதூரமான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு கனடாவிற்கான இந்திய அரசாங்கம் உதவியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் ஆறு இந்திய ராஜதந்திரிகளை கனடிய அரசாங்கம் நாட்டை விட்டு வெளியேற்றியிருந்தது.

இதற்கு பதிலளிக்கும் வகையில் இந்தியாவும் கனடிய ராஜதந்திரிகளை வெளியேற்றியிருந்தது.

இவ்வாறான முரண்பாட்டு நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பயணங்களுக்கு எதிர்காலத்தில் பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என இந்திய புலம்பெயர் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# 260,000 டொலர் பெறுமதியான மதுபானங்களை திருடியவர் கைது

கனடாவில் கடைகளில் சுமார் 260,000 டொலர் பெறுமதியான மதுபானங்களை களவாடிய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபர் குறைந்த பட்சம் 90 திருட்டுச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளார் எனவும் எல்.சி.பி.ஓ. வர்த்தக நிலையங்களில் இவ்வாறு மதுபான வகைகளை களவாடியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மற்றும் செப்டெம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்த கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பீல் பிராந்தியம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ரொறன்ரோ பகுதியில் உள்ள கடைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





அதிகாரிகள், எல்.சி.பி.ஓ. வளப் பாதுகாப்புக் குழுவுடன் இணைந்து 38 வயதான அவில் ஹசன் அப்டியை கைது செய்துள்ளனர்.

அப்டி ஏற்கனவே இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

## லட்வியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்ற கனடிய படைவீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வைட்மேன் எவ்வாறு உயிரிழந்தார் என்பது பற்றிய விபரங்களை கனடிய இராணுவம் வெளியிடவில்லை.

லட்வியாவில் நேட்டோ அமைதி காக்கும் படையணியில் வைட்மேன் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக ரஸ்யாவின் அச்சுறுத்தல்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் இந்த நேட்டோ படை லட்வியாவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

